வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

தரம் :- 13 (2019)	தமிழ் - I	புள்ளித்திட்டம்

பகுதி I

1) அ)

(i) தோழியே நீ வாழ்வாயாக இரவு தோறும் விளநருகின்ற அலைகளால் மோதப்பெற்ற தாழை மரத்தின் வெண்ணிறமான பூ நரையைப் போல் மலர்கின்ற பெரிய கடற்துறைகளைக் கொண்ட பரந்த நீர்ப்பரப்பை உடைய நெய்தல் நிலத் தலைவனோடு கூடி மகிழ்வதற்கு முன்னர் எனது தாமரைப் பூவைப் போல் விளங்கும் கண்களும், மூங்கிலைப் போல் விளங்கும் அழகுடைய வெற்றி பொருந்திய தோள்களும் பிறைபோலத் தோன்றிக் காண்பவர் அறிவை மயங்கச் செய்யும் நெற்றியும் பெரிதும் நல்லவனாக பொலிவுற்று இருந்தன. அந்நிலை இப்பொழுது கழிந்து விட்டது.

(ii) முதற் பொருள் - நெய்தல் நிலம்.
இரவுக் காலம்
கருப்பொருள் - தாமரைப்பூ, மூங்கில், தாழை
நாரை, பிறைச்சந்திரன்
உரிப்பொருள் - இரங்கல்

(iii) 'அல்கலும் தயங்கு திரை பொருத தாழை வெண்பூக் குருகென மலரும்'
தாழம் பூவினை நாரை என மயங்கி அதனை ஒருவரும் பறித்துச் சூடாமையில் அது வீணாகிப் போவதைப் போல தலைவனும் தலைவியின் உண்மை நிலையினை உணராததாலும் அவளைத்திருமணம் செய்யாமையாலும் தன் நலனும் அழகும் வீணே கழித்து விடுமோ என்கின்ற தலைவியின் ஏக்கமும் பிரிவுத் துயரமும் உணர்த்தப்பட்டுள்ளது. (3 x 4 = 12 புள்ளிகள்)

ஆ)

(i) குகன் போர் செய்யும் நோக்கோடு கங்கையின் எதிர்க்கரையில் வந்து நிற்க அவனைப்பற்றிச் சுமந்திரன் பரதனுக்குக் கூறிய சந்தர்ப்பம்.

(ii)
- கங்கையாற்றின் இரு கரைகளையும் தனக்கு சொந்தமாக உடையவன்.
- எண்ணற்ற படகுகளை உடையவன்.
- உயர்ந்த தோள்களையுடையவன், மதங்கொண்ட ஆண் யானையை ஒத்தவன்.
- வில்லைக் கையிற் பிடித்த சேனையாகிய பெருங்கடலை உடையவன்.

(iii) சூரிய வம்சத்தின் ஒப்பற்ற தலைவனாகிய இராமனின் ஆத்ம நண்பனாக விளக்குபவன் எனக் கூறுவதனூடக இருவருக்குமிடையிலான அன்னியோன்னியமான நட்பு / அன்பு கூறப்பட்டுள்ளது. (3 x 4 = 12 புள்ளிகள்)

2)
அ)

(i) உழவர், நெசவாளர், வீதி அமைப்போர் ஏனைய தொழில் செய்வோர்

agaram.lk

(ii) • உழுது வாழ்பவன் உணவின்றிக் கண்ணீரில் வாழ கொழுத்த செல்வன் அவனது குருதி குடித்து மகிழ்தல்.

• நெசவு செய்வோன் ஆடையின்றித் துன்பப்பட பெருஞ்செல்வன் உணவு அருந்தியபின் பட்டுத் துணியில் கை துடைத்தல்.

• தான் உழைப்பில் ஈடுபடாது தொழிலாளியின் உழைப்பை அனுபவிப்பதில் அவனது வயிறு பற்றி

'பழுத்த அவனின் பெருவயிறு
பானையாகச் சிரிக்கிறது' எனவும்
'மூடை வயிற்றுப் பெருஞ்செல்வன்
எனவும் குறிப்பிடல்

• தொழிலாளி ஆன்மா நொந்து தவிக்க அவனது உயிரை விழுங்கி முதலாளி ஏப்பம் விடுதல்.

(iii) • "சோடையற்ற சொறி நாயாயச் சோம்பி நின்றது போதுமடா" என உழைப்பவர்களைத் தட்டி எழுப்பிப் புரட்சி செய்யத் தூண்டுதல்.

• இறப்பதற்கு முன்னரே பானை வயிற்றுச் சீமானை ஆடையின்றி, அணியின்றி, உணவின்றி, காடாக்கினியில் தள்ளிவிட கரங்கள் கோர்த்து எழுமாறு வேண்டுதல்.

• ஆக்கம் செய்த கரங்களினால் அழிவு செய்ய எழுங்களடா

• தீயாய் எழுந்து முதலாளியின் சுகவாழ்வை எரித்து சாம்பலாக்குதல்.

• சீமானின் பல்லை உடைத்து பயிருக்கு எருவாய்ப் போடுதல்.

• நெல் நிரம்பிய அவர் மனைகளை நெருப்பு இட்டு அழித்தல்.

(iv) தொழிலாளர் இயங்கா விடில் இவ் உலகம் இயங்காது என்பதால் அவர்களே இவ்வுலகின் எஜமானர் எனத் தொழிலாளரைப் பெருமைப் படுத்துதல்.

(4 x 4 = 16 புள்ளிகள்)

ஆ)

(i) • தமிழ் நூல்களில் பொதிந்துள்ள கருத்தமைந்த இலக்கியங்களை அவற்றின் மதிப்பை பிறருக்கு உணர்த்துதல்.

• பிற நாட்டவரின் அரிய விஞ்ஞான நூல்களையும் பிறவற்றையும் மொழிபெயர்த்து தமிழுக்கு உரிமையாக்குதல்.

• எளிமையான நடையில் உயர்ந்த சாத்திர நூல்களை எழுதுதல்.

• வடமொழியில் இருந்து பல்வேறு வகைப்பட்ட தத்துவ விசாரணை நூல்களைத்தமிழுக்கு மொழி பெயர்த்தல்.

• இலக்கியங்களினூடாக தேகத்திற்கு வலிமையும் மனதுக்கு உறுதியும் தரத்தக்க எண்ணங்களை பரப்ப முயற்சித்தல்.

(ii) • தமிழ்நாடு செய்த பெரும் தவப்பயனாகத் தோன்றியன் கவியரசனாகிய சுப்பிரமணிய பாரதி.

• நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்தில் படும்படியாக எடுத்துரைத்து தனது நாட்டுக்கு புத்துயிரளிக்க வல்லவனே உண்மைக் கவி எனக் குறிப்படும் ஆசிரியர் அத்தகைய உண்மைக் கவிஞனாகப் பாரதியை இனங்காணல்.

• பாரதி இறந்த பல வருடங்கள் ஆகாவிடினும் அவரது கருத்துக்கள் மக்களிடையே புத்துயரளித்து வருகின்றன எனல்

• பாரதிபோல் கவிஞர் பலரை நாட்டில் உதாரணமாகச் செய்யுமாறு பராசக்தியை வேண்டிக் கொள்வோமாக எனக் கூறுவதன் மூலம் பாரதியைப் பெருமைப்படுத்தல்.

(iii) • வடமொழியில் இருந்து தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய பல நூல்கள் உள்ளன.

• மேல் நாட்டாசிரியர்கள் அவற்றை மொழி பெயர்த்து தமக்கு உரிமையாக்கிக் கொண்டனர்.

• தமிழிலோ சூத்திரருக்கும் பெண்களுக்கும் தகவுடையனவெனக் கூறப்பட்ட சில புராணக் கதைகள் மட்டுமே மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

agaram.lk

(iv) • ஓரளவு எளிமையும் இலக்கியச் செழுமையும் உடையதான மொழிநடை.
- தர்க்க ரீதியான முறையில் விடயங்களை எடுத்துச் செல்லுதல்.
- நீண்ட வசன நடை.
- வாசகனை முன்னிறுத்திக் கருத்தினைக் கூறல்.
  'உலகமாதாவாகிய பராசக்தியை வேண்டிக் கொள்வோமாக

(4 x 4 =16 புள்ளிகள்)

பகுதி II

3) அ) முதலாம் இரண்டாம் குறள் விளக்கம்.
- செயலைத் தொடக்குவதற்கு முன்னர் அச்செயலால் வரும் நன்மை தீமைகளையும் செய்து முடித்த பின்வரும் பயன்களையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்தல் வேண்டும்.
- தாம் ஆராய்ந்து கொண்ட இனத்தோடு சேர்ந்து ஆராய்ந்து பின்னர் தாம் எண்ணியும் செயலைச் செய்வோர்க்கு பெறமுடியாத பொருள் யாதென்றும் இல்லை

ஆ) மூன்றாம் குறள் தொடக்கம் ஐந்தாம் குறள் வரையான குறள்களின் விளக்கம்.
- பின்னர் கிடைக்கக்கூடிய இலாபத்தைக் கருதி முன்னர் கிடைத்த முதலை இழந்து விடும் செயலை அறிவுடையோர் செய்ய மாட்டார்கள்.
- தமக்கு வரும் இழிவு ஆகிய குற்றத்திற்கு அஞ்சுபவர்கள் தெளிவில்லாத எந்தச் செயலையும் தொடங்கமாட்டார்கள்.
- செய்யும் செயலின் வகைகளை எண்ணிப் பார்க்காமல் அரசன் போருக்குச் செல்லுதலானது பகைவரை வளரும் நிலத்தில் நிலைபெறச் செய்யும் ஓர் நெறிமுறைாகும்.

இ) ஆறாவது குறள் விளக்கம்.
- ஒருவன் செய்யத் தகாதவற்றைச் செய்தாலும் கெட்டுப் போவான். செய்ய வேண்டியனவற்றை செய்யாமல் விடுவதனாலும் கெட்டுப் போவான்.

ஈ) ஏழாம் குறள் தொடக்கம் பத்தாம் குறள் வரையான குறள் விளக்கம்.
- ஒரு செயலைச் செய்யத் தொடங்கு முன்னர் அது குறித்து ஆராய்ந்து பார்த்துத் தொடங்குதல் வேண்டும் தொடங்கிய பின் எண்ணிப் பார்ப்போம் என நினைப்பது குற்றமாகும்.
- செய்ய வேண்டிய நெறிமுறைகளை அறிந்து முயலாத முயற்சியானது பலர் துணையாக நின்று காத்த போதிலும் கெட்டுவிடும்.
- அவரவர் இயல்பினை அறிந்து செயலை மேற்கொள்ளாவிடின் நல்ல உபாயங்களை அறிந்து செயலை மேற்கொண்டாலும் குற்றம் உண்டாகும்.
- அரசர் தமது நிலைக்குப் பொருந்தாத செயல்களைச் செய்வாராயின் அதனை உலகம் ஏற்றுக் கொள்ளாது எனவே உலகம் இகழாதவற்றை ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

(4 + 6 + 2 + 8 = 20 புள்ளிகள்)

4) அ) யானைகள் நீந்திச் செல்லும் காட்சி
- மேகக் கூட்டங்கள் மோதுவதால் உண்டாகும் முழக்கவொலி அதிகரிக்க அவை கடல் நீரை முகந்து கொள்ள நெருங்குவது போலவும் படகுகள் கடலில் பாய்மரத்துடன் படர்வன போலவும் யானைகள் நீண்ட தும்பிக்கையை உயர்த்தி நீந்திச் செல்லல்.
- யானைகள் கங்கையில் நீந்தும் பொழுது சங்குகள, சுறாமீன்கள், முத்துக்கள், இரத்தினங்கள் ஆகியவற்றைத் தள்ளியவாறு சென்றன.
- சொரிகின்ற மதநீர்ப் பெருக்காகிய கலங்கல் வெள்ளத்தை உடைய யானைகளின் தலைமேடுகள் அலைகளுக்கு இடையில் வெளிப்பட அவை கங்கை என்ற பெண்ணின் மார்பினைப் போல் காட்சியளித்தன.

தேர் பற்றிய சித்தரிப்பு
- உறுதியான தேர்களை அவற்றின் கொடிஞ்சி, தட்டு, அச்சு முதலான பல்வேறு பாகங்களைத் தனித்தனியாகப் பிரித்தும் குதிரைகளையும் படகுகளில் ஏற்றினர்.

குதிரைகள் பற்றிய சித்தரிப்பு
- பால் போன்ற வெண்மையான உடம்பையும் அச்சம் கொண்ட மனத்தையும் காற்றின்றிய போல வேகமாகச் செல்லும் நடையினையும் கடிவாளமும் உடைய எட்டுக் கோடி குதிரைகள் சேல்மின்கள் திரண்டது போல் படகுகளில் ஏற்றப்பட்டன.

aqaram.lk

ஆ) • மகளிர் ஒருவர் முன் ஒருவராக மிகவும் நெருங்கிப் படகுகளில் இருந்தனர். யானைகளின் வரிசையில் அவற்றின் முனைகள் குத்துமாறு கொம்புகள் நெருங்கியது போன்று மகளிரின் திரண்ட முலைகளும் நெருங்கி இருந்தன.
- படகுகள் மோதிய போது பெண்கள் மனங்கலங்கி இருபக்கமும் பார்க்க அவர்களது கண்கள் கயலமீன் கூட்டத்தைப் போன்றிருந்தன.

இ) • நாவாய்கள் வேகத்தில் ஒன்றை மற்றொன்று முந்திச் செல்லுதல்.
- சேனைகளை அக்கரையில் இறக்கிவிட்டு வெறுமையாக வரும் படகுகள் கடலில் உள்ள நீரை எடுத்து சொரிந்து விட்ட கடலை நோக்கித் திரும்பும் மேகத்தை ஒத்திருந்தன.
- வலிய பெரிய தண்டுகள் பாய்மரம் போலத் தோன்றவும் தேர்களின் தட்டிடையே நடப்பட்ட முத்துக்களுடன் விளங்கும் கொடிகள் நீண்ட பாய்மரக் கப்பல்களின் கூட்டம் போல படகுகள் சென்றன.
- பெண்கள் ஏறிய படகுகள் நீர் விளையாட்டை முடித்து தேவமாதர் ஏறிச் செல்லும் விமானங்களை ஒத்திருந்தன.
- துடுப்புக் கோல்கள் இரண்டு கால்கள் போல் காணப்பட கங்கையில் நடந்தால் போல் செல்லும் படகுகள் பெண்களின் பாதங்கள் பட்டதால் உயிர்ப்பு அடைந்தன.

ஈ) • இடிபடு முழக்கம் பொங்க இனமழை மகர நீரை முடிவுற முகப்ப ஊழி இறுதியின் மொய்ப்ப போல.
- "கொடியொடு வங்கம் வேலை கூம்பொடு படர்வ போல"
- "உத்தரியம் மானப்படர்திரை"
- உயர்ந்த கும்பம் பூங்குழல் கங்கை நங்கை முலை"
- 'மடிஞ்ச பின் உடம்பு கூட்டும் வினை'
  'சேல் திரண்டனைய கதியொடு'
  'பால் திரண்டனைய மெய்ய'
  கால் திரண்டனைய கால கடுநடை'
- 'கோடுகள் மிடைந்த வென்ன மிடைந்தன குவவு கொங்கை'
- 'கயற்குல நிகர்த்த கண்கள்'
- 'உவரி மீளும் அகன் மழை நிகர்த்த'
- 'அகிலிடு தூபம் அன்ன'
- 'முத்தம் நகுகொடி நெடிய பாய் இனம் என்ன'
- ஆனனம் கமலத் தன்ன
- அமிழ்த்தச் செவ்வாய் (எவையேனும் நான்கினை விளக்குக)

(04 x 05 = 20 புள்ளிகள்)

agaram.lk

5) அ) ◆ விண்ணில் இருந்து தனியரசு செலுத்துகின்ற ஒப்பற் செங்கோலை உடைய இறைவன், துன்பம் அடைவதே தனக்கு இனிமையானது எனக் கருதி இந்த எளிமையான கோலத்தில் பிறந்தது ஏன்?
- வேலுடனும் நீண்ட வாளுடனும் வில்லும் அம்பும் சக்கரமும் ஒளிவீச ஆணைச்சக்கரத்தை சுழற்றியவாறு ஆட்சி புரியும் ஒரு மன்னனுக்கு துணையாக அமையக்கூடிய படைகள் இவனுக்கு இல்லாமல் போனதுமேன்?
- மாளிகைகளும் ஆபரணங்களும் மன்னர்களுக்குரிய செல்வங்களும் இவனுக்கு இல்லாமல் போனதுமேன்?
- குடியிருக்க வீடு இன்றி இக்குகையிடத்தே வந்தது ஏன்?
- மக்களுக்கு வழிகாட்ட வந்தான் என்றால் வல்லமை உள்ள கோலத்துடன் வானுலக உருவத்தோடு மறைக்காமல் தோன்றினால் என்ன?

ஆ) • தனித்து நின்று போர் செய்யும் வல்லமை இல்லாதவர்க்கே அம்பு முதலான படைக்கலங்கள் தேவைப்படும் - துவண்டு விழும் கொடியே கொழுகொம்பினைப் பற்றிப்படரும் ஆற்றல் மிக்க இறைவனுக்கு இத்தகைய துணை தேவை இல்லை.
- உலகனைத்தையும் ஆளும் இறைவன் தான் ஒரு செயலைச் செய்து முடிக்க வேண்டும் என நினைத்தால் நினைத்தவாறே முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர் அவரிடத்தில் கோபம் தோன்றினால் அதனை வெல்லக் கூடியவர் உலகில் இல்லை.

- இறைவனது ஆற்றலால் பெரு வெள்ளம் உலகை மூடியது சோதோம், கொமாரா முதலிய நகரங்கள் எரிந்தது இத்தகைய வல்லமைகளைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது.
- உலக முடிவு நாளைப்பற்றி முன்னோர் கூறியவை நிறைவேறும்.

இ)
- எதிர் காலத்தில் நடக்க இருக்கும் செயல்களை முன் கூட்டியே அறியும் இயல்புடையவன்.
- மக்கள் விரும்பியவாறு அவர்களது ஆசைக்கும் மேலாக அதிகமாகக் கொடுக்கும் வள்ளல்.
- வானுலகில் தனியரசு செலுத்தும் ஒப்பற்ற செங்கோலை உடையவன்.
- மக்களை வானுலகு அழைத்துச் செல்லும் வழிகாட்ட வந்தவர்.
- தானே தனித்து நின்று எச்செயலையும் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்.
- தான் செய்ய நினைத்த செயலை நினைத்த மாத்திரத்தே செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்.
- இறைவனிடத்தில் நெருப்பினைப் போல கோபம் தோன்றினால் இதனை யாராலும் வெல்ல முடியாது.
- ஊழிக் காலத்தில் அக்கினி மழையால் நகரங்களை அழித்தவன்.
- தாய் தந்தை இல்லாதவன்.

ஈ) ‘தூது உண் தாதுவ தூய்மலர் வாய்’
‘கொம்பில் ஏறும் இடை துவளும் கொடி’
‘கூறுவாள் செய்யும் கொள்கை’
‘தாள் எழும் கமலம் சுடர் தாவிய கோள் எழும் கதிர்’
‘மின்னை ஒன்றிய வேடம் எடுத்து’
‘வாள் எழுந்த கண்’

(எவையேனும் மூன்று உவமைக்கு விளக்கம் தரவும்)

(4 x 5 = 20 புள்ளிகள்)

6) அ)
- நக்கிரன் கதையைக் கூறி நக்கீரருடைய போக்கில் இலக்கியத்தைப் பார்ப்பது விமர்சனம் அல்ல என எடுத்துரைத்தல்
- ‘கொங்குதேர் வாழ்க்கை’ எனும் குறுந்தொகைப் பாடல் காதலனின் அன்பின் ஆழத்தை நோக்க வேண்டுமே ஒழிய நக்கீரனது அணுகுமுறை தவறாகும்.’
- வண்டு மலரைச் சங்காக ஊதுமென்ற புகழேந்தியின் வருணனைக்கு எழுந்த தடை.
- சாற்று கவிகள் உபசார வார்த்தைகளாக இல்லாத போது கூட நூலின் பெருமையைப் பொதுப்படக் கூறுவனே அல்லாமல் அவற்றை இலக்கிய விமர்சனமாகக் கொள்ள முடியாது – எடுத்துக்காட்டு நம்மாழ்வார் பெருமையினை பாடியிருத்தல்.
- உரையாசிரியர்கள் சொல்லின் பொருளையும் யாப்பையும் அணியையும் பேசிக் கொண்டு மொழியோடு நின்று விடுகின்றனர். இலக்கியத்தை கருத்தில் கொள்வதில்லை.

ஆ)
- இலக்கிய விமர்சனம் என்பது ஒரு கலை இலக்கியம் எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது இலக்கிய விமர்சனம் இலக்கிய வளர்ச்சிக்கு விமர்சனம் இன்றியமையாத சாதனமாகும்.
- இலக்கியப் பொருள்களின் தன்மையை, அடிப்படையான முறையில் மேல்நாட்டில் அரிஸ்டோட்டில் காலத்தில் இருந்து இன்று வரை ஆராய்ந்திருப்பது போல ஆராய வேண்டும்.
- ஒரு நூல் எப்போது இலக்கியமாகின்றது என்கின்ற ஆராய்ச்சியை விரிவாகச் செய்ய வேண்டும்.
- இலக்கியத்துக்கு பொதுவான இலக்கிய தத்துவத்தை உருவாக்க வேண்டும்.
- தர்க்க ரீதியாக ஏனைய இலக்கியங்களின் ஒப்பீட்டு இலக்கிய விமர்சனம் செய்தல் வேண்டும்.
- இலக்கியத்தின் பண்பு பற்றிய ஆராய்ச்சி வேண்டும்.
- இலக்கியத்தை கால அடிப்படையில் ஒப்பிடல்.
- இலக்கியத்தின் பெருமையை உணரவும் அனுபவிக்கவும் விமர்சனம் வழிகாட்ட வேண்டும்.

agaram.lk

- இலக்கிய அனுபவத்தைத் தெளிவாக்கி அது எவ்வாறு சொல்லிலேயே தேங்குகின்றது என்பதைக் காட்டி எவ்வாறு கலையாகிறது என்பதைத் தத்துவ ரீதியாக ஆராய்ந்து கலானுபவத்தின் எல்லைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

இ)
- தத்துவ ரீதியான இலக்கிய விமர்சனம்
- சரித்திர ரீதியான இலக்கிய விமர்சனம்.
- வாழ்க்கைச் சரித ரீதியிலமைந்த இலக்கிய விமர்சனம்
- ஒப்புமை ரீதியான இலக்கிய விமர்சனம்.

இவை பற்றிச் சுருக்கமாக விளக்குதல் வேண்டும்.

ஈ)
- இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புவது
- பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல
- நாடக வழக்கு (06 + 06 + 05 + 03 = 20 புள்ளிகள்)

7) அ) கண்டிப்பான சுபாவம்
- முகத்தை விறைப்பாகவும் கடுகடுப்பாகவும் வைத்திருத்தல்.
- வேலையாட்களை எந்நேரமும் ஏசிக் கொண்டிருத்தல் அவர்களைத் திட்டுவதற்கு சரியாகவோ தவறாகவோ காரணத்தைத் தேடிக் கொண்டிருத்தல். எடுத்துக் காட்டு
- ஏண்டா தடிப்பயல்களா நீங்க என்ன பரதேசிகளா? சந்நியாசிகளா? எருமைமாட்டுப் பயல்களா? பிச்சைக்காரப் பயல்கள் கூட இப்படிச் சாம்பலை அள்ளிப் பூச மாட்டானேடா? தரித்திரம் பிடிச்ச பயல்களா?
- 'அடிசெருப்பாலே நாயே வாயைத் தொறக்கிறியா நீ' என எதிர்த்துக் கேள்வி கேட்பவரை ஏசுதல்.
- கஞ்சிக்கில்லாமல் செத்த பயல்களை எல்லாம் இரக்கப்பட்டு வேலைக்கு அமர்த்தியது எனது முட்டாள்தனம்.
- பருப்பிலே கல்லு புடைத்ததா? எனக் கேட்டு ஏசுதல்.
- முத்தையா பிள்ளையின் கடன் பாக்கியைக் கேட்டதா எனக் கேட்டு ஏசுதல்.
- உள்ளே போகுமாறு ஏசுதல், திரும்ப வராமைக்கு ஏசுதல்.
- விபூதி பூசாமைக்கு ஏசுதல்.
- கோவில் செல்ல அனுமதி கேட்காமல் நின்றமைக்குத் திட்டுதல்.

வேலையாட்களின் நலனில் அக்கறை
- ஏனைய கடைகளை விட அதிக சம்பளம் வழங்குதல்.
- தீபாவளி போன்ற விசேட நாட்களில் புதிய ஆடை, பணம் வழங்குதல்.
- வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்லாமை.
- வேலையாட்கள் மீது யார் புகார் சொன்னாலும் அதை ஏற்காமை.
- வீட்டுக்கு கடைப்பையன்கள் வந்தால் அன்பாக உரையாடல், உணவு வழங்குதல்,
- திருமணம் செலவுக்கு கணிசமான தொகை வழங்குதல்.
- வேலையாட்கள் தனிக்கடை தொடங்கினால் உதவி செய்தல்.
- கோவிலுக்கு வேலையாட்கள் சென்ற பொழுது நான்கு ரூபா பணம் கொடுத்தல்.
- வேலையாட்கள் நல்ல நிலைக்கு தரவேண்டும் என்பதற்காகவே தான் திட்டுவதாக நண்பருக்குக் கூறுதல்.

ஆ)
- கதிரேசன் செட்டியாரின் நீண்ட கால நண்பர்.
- கதையின் துணைப்பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளார்
- வேலையாட்களை எந்நேரமும் திட்டிக் கொண்டிருக்கும் கதிரேசன் செட்டியார் இவர் வரும் வேளையில் திட்டுவதை நிறுத்துவதால் வேலையாட்களுக்கு ஆறுதல் அளிக்கும் பாத்திரமாக விளங்குகின்றமை.
- செட்டியாரின் சமூக அந்தஸ்தை வெளிப்படுத்தும் பாத்திரமாக பயன்படுத்தப்பட்டுள்ளார்.
  'நீங்க ரொம்ப தயாள குணத்தோட இருக்கிறீங்க ஊரிலையும் உங்களைப் பற்றிப் பெருமையாய்ப் பேசுறாங்க'
- செட்டியாரின் தயாளகுணமும் வேலையாட்கள் மீதான அக்கறையும், தியாக உணர்வும் வெளிப்படுத்தப்பட இப்பாத்திரமே பயன்படுத்தப்பட்டிருத்தல்.
- செட்டியார் காரணமின்றி தீட்டும் போது நியாயத்தை எடுத்துரைக்கும் பாத்திரம்

agaram.lk

இ) • கதையின் நிறைவில் செட்டியாருக்கும் ஷண்முகப் பிள்ளைக்கும் இடையில் நடைபெறும் உரையாடல் மூலம் அவரது தியாக உணர்வு வெளியிடுகின்றது.
• கடைப்பையன்களின் எதிர்கால நலனுக்காக தனது உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் தியாகம் செய்து வாழ்பவர் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.
• அண்ணாச்சி அன்பா ஆதரவா இல்லேன்னா திட்டுவேனா? பயகவிருத்திக்கு வரணும் தானே தொண்டைத் தண்ணியை வத்த வைச்சிக்கிட்டுருக்கேன். கத்திக் கத்தி என் உசிரும் போகுது? (8 + 7 + 5 = 20 புள்ளிகள்)

8) அ) ◆ ‘அதர்ம வழியில் இருந்து நீங்குங்கள், வலிமை உடையதான ஊழ்வினை வந்து வருத்தும்’ என சான்றோர்கள் கூறினாலும் மன உறுதியற்றவர்கள் கருத்தில் கொள்ள மாட்டார்கள்.
◆ தீய வினை வருத்தும் வேளையில் அறியாமை காரணமாக வருந்துவர்.
◆ கற்றறிந்தவர்கள் வினைப் பயனை அனுபவிக்கும் பொழுது வருந்தமாட்டார்கள்.
◆ பிரிவுத் துன்பம், புணர்தல் துன்பம், மன்மதன் வருத்தும் துன்பம், பெண்களுடன் கூடியவர்க்கே உண்டாகும் துறவியர்க்கு இல்லை.
◆ காமத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டவர்கள். காதலில் வருந்தி எல்லை காணமுடியாத துன்பத்தைக் காண்பார்கள்.
◆ வினைப் பயனால் வரும் துன்பம் தொன்று தொட்டு வருவதாகும் இதற்கான ஆதாரமாக இராமன், நளன் கதையை எடுத்துரைத்தல்.

ஆ) • திருமாலின் அவதாரங்கள், இராமாவதாரச் செயல்கள் கூறப்பட்டுள்ளன.
• அரக்கர்களைக் கொன்றழித்த கொடி அம்புகளை உடையவன்.
• இராவணனின் பத்துத் தலைகளும் உதிரும்படி அம்பினைச் செலுத்துபவன்.
• பிரகலாதனைக் கொல்ல வந்த இரணியனின் உடலைக் கிழித்துக் கொண்றவன் - நரசிமம அவதாரம்.
• மூவுலகையும் அளந்து அண்டம் முழுதும் நிறைந்த நீள்முடியை உடையவன் - வாமன அவதாரம்.
• ஊழிக் காலத்தில் ஆலம் இலைமேல் பாலகனாகக் காட்சி அளித்தவன்.
• மண்ணை அள்ளி உண்டதன் மூலம் முழு உலகையும் தனது வாயினுள் காட்டுதல் - கிருஷ்ண அவதாரம்.
• சிவபெருமான் கலத்தில் பிச்சை எடுத்த துயரத்தை நீக்கியவன்.
• பிரமனைப் படைத்தவன்

agaram.lk

இ) • முகில்கள் தவழும் சோலைகளின் நிழலில் மயில்கள் ஆடும்.
• நதி ஓடும் இடங்களில் எல்லாம் சங்கு முத்துகளை ஈனும்.
• வயல்தோறும் வண்டினங்கள் ரீங்காரமிடும்.
• பெண்கள் தமது கூந்தலுக்கு இடுகின்ற வாசனைப் புகை ஆகாயம் வரை செல்ல அவை மேகம் என குவிய சோலைகள் தோறும் மயில்கள் ஆடுதல்.
• தாமரை மலரருள்ள அகன்ற பொய்கைகள் சூழ்ந்த வயல்களில் சத்தமிட்டவாறு சங்குகள் முத்துக்களை வளமாகத் தருதல்.
• மலை உச்சிகளில் மேகமானது தவழ்ந்து மழையைப் பொழிதல்.
• சோலைகளில் பலாக்கனிகள் தாமாக உடைந்து விழுதல்.

ஈ) • ஒவ்வொருவரது துயரமும் அவரவர்க்கு வலிதானதாகும். இது குறைவானது அது மேலானது என வாதாட முடியாது ஒருவர் துயரத்தை மற்றவர் பரிவுடன் விளங்கிக் கொள்ள வேண்டும் என்கின்ற இயல்பு இருபாத்திரங்களின் மூலம் வலியுறுத்தப்படல்.
• இருவரும் தத்தமக்கு ஏற்பட்ட இழப்புக்களைப் பெரிதாக எண்ணி துயரமடைந்தமையால் பிறரது இழப்புக்களையும் துன்பங்களையும் பற்றி எண்ண முடியாத மனித இயல்பு உணர்த்தப்படல்.
• இருவருக்கும் ஏற்பட்ட துயரமிகுதியும் அதனைத் தாங்க முடியாத நிலையும் மனித இயல்பாக எடுத்துக் காட்டப்படல்.
• தமது துயரமே மேலானது எனக்கருதும் போது மனக்கசப்பும் வாக்குவாதங்களுமே ஏற்படும்.

சம்பங்களின் துணைக் கொண்டு விளக்குதல் வேண்டும்

உ)
- உணவு, உடை, உறையுள், உறவு முறைகள், பழக்கவழக்கங்கள், வழிபாட்டு நம்பிக்கைகள் பண்பாட்டுப் பதிவுகளாக கூறப்பட்டுள்ளன.
- பால், தயிர், கருவாடு, இறைச்சி, காய்கறிகள், கிழங்கு வகைகள் என்பன உணவு நிலையில் பயன்படுத்தப்படல் இவை பற்றிய விரிவான விளக்கம் இடம் பெறல்.
- இரவு வேளைகளில் பிட்டு, நண்டு, இலைகறிகளுடன் உணவு உண்ண வருகின்றவர்களுக்கு உணவு அளித்தல்.
- உடை நிலையில் வேட்டி ஆண்களின் ஆடையாகவும் சேலை பெண்களின் ஆடையாகவும் விளங்கின.
- கிராமத்து வீடுகளும் வீட்டுச் சூழல்கள் பற்றியதுமான காட்சி விபரிப்புகள் அவற்றினூடாக பண்பாடு உணர்த்தப்படல்.
- பூப்பு நீராட்டு விழா, எளிமையான திருமண நடைமுறை பற்றிப் பதிவு செய்திருத்தல் பேச்சுக் கல்யாணம், சீதனம் வாங்குதல்.
- கிராமிய சிறிய கோவில்கள் வழிபாடுகள், வழிபாட்டு நடைமுறையில் விபூதி அணிதலும் அதனை வீட்டு நிலைகளில் தொங்க விடுதலும்.
- கள்ளுக் கொட்டிலில் கள் அருந்துதல், சுருட்டுப் பிடித்தல்.
- சாதிப் பாகுபாடு. (10 + 10 = 20 புள்ளிகள்)

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

தரம் :-13 (2019)	தமிழ் - II	புள்ளித்திட்டம்

பகுதி I

01.

1) 1	*11) 3*
2) 1	*12) 4*
3) 3	*13) 1*
4) 3	*14) 1*
5) 5	*15) 2*
6) 1	*16) 2*
7) 2	*17) 3*
8) 4	*18) 3*
9) 4	*19) 3*
10) 3	*20) 5*

(20 புள்ளிகள்)

02. அ)
- இலக்கிய வளர்ச்சிப் போக்கில் மாற்றம் படிப்படியானதே.
- ஒரு எழுத்தாளன் மக்கள் பணியில் தன்னை இணைத்துச் செயலாற்ற வேண்டும்.
- வறுமையிலும் துன்பத்திலும் வாழும் மக்களின் உணர்வுகளைப் புரிந்து முழுவடிவம் கொடுப்பதோடு இதற்குக் காரணமான சுகபோக வர்த்தகக்கத்தினரின் முகத்தாரையைக் கிழிப்பது அவனது கடமையாகும்.
- பொதுவாக எழுத்தாளன் நடுநிலைமையாளன் அல்ல.
- சுரண்டுபவனுக்கும் சுரண்டப்படுபவனுக்கும் இடையில் நின்று உபதேசம் செய்வது சுலபம்.
- புகழ் கிடைக்கும் பயன் நீதி மட்டுமன்றி அநீதியும் சாகாவரம் பெறும். *(13 புள்ளிகள்)*

agaram.lk

ஆ)

(i) புலவன் கற்பனைத் திறனிலும் மொழியாற்றலிலும் எம்மிலும் பன்மடங்கு சிறந்து விளங்குவதால், அவனாற் கவிதை புனைய முடிகின்றது. எம்மால் முடிகிறதில்லை.

(ii) எங்களுடைய அனுபவம் ஆழம் அல்லது தெளிவு உள்ளதாக இல்லை அதனால் அந்த அனுபவத்தை நாம் தெளிவாக வெளிப்படுத்த முடிவதில்லை. இந்நிலையில் சிறந்த அனுபவம் ஒன்றைப் பெற்று இன்புற வேண்டுமெனில் ஒரு புலவனுடைய உதவியையே நாட வேண்டியுள்ளது. ஆகாய வெளியில் நீந்திச் செல்லும் குளிர்ந்த சந்திரனைக் காணும் போது எமக்கு இன்ப உணர்வு ஏற்படுகின்றது. ஆனால் நாம் அறிய அழுந்துவதில்லை புலவன் அதில் அழுந்துவதால் பன்மடங்கு இன்பத்தைப் பெற்று அந்த அனுபவத்தை கவிதை உருவிலே தருகிறான். எனவே தான் நாம் அவனுடைய உதவியை நாடி, அக்கவிதையைப் படித்து தெளிந்த அனுபவத்தைப் பெற்று பரவசமடைகிறோம்.

(iii) அக்கவிதைக்குரிய மனோ நிலையை ஏற்படுத்தல்.
அதை பலமுறை படிக்க வேண்டும்.
அதைப் படிக்கும் போது ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் இருத்தல் வேண்டும்.
அதன் கண் உள்ளத்தை தோய விடுதல் வேண்டும்.

(iv) கவிதையை யதார்த்த புலவனுடைய அனுபவம் எமக்குப் புலனாகும். அத்தகைய அனுபவத்திலே அழுந்துவதால் சொலற்கரிய இன்பத்தை அடையலாம்.
இது அமர வாழ்வைத் தருகின்றது.

(4 x 3 =12 புள்ளிகள்)

03. கட்டுரை

பொருள் -	10 புள்ளிகள்	
மொழிநடை	10 புள்ளிகள்	
அமைப்பு -	05 புள்ளிகள்	(25 புள்ளிகள்)

பகுதி II

04. அ) சைவ இலக்கியங்கள் (காரைக்கால் அம்மையார் பாடியவை)

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்.
திருவாலங்காட்டு திருப்பதிகம்
அற்புதத் திருவந்தாதி
திருவிரட்டை மணிமாலை

வைணவ இலக்கியங்கள் (முதலாழ்வார்கள் பாடியவை)

முதலாந் திருவந்தாதி
இரண்டாந் திருவந்தாதி
மூன்றாம் திருவற்தாதி

- சிவன், திருமால் ஆகிய கடவுளர் மீதான ஆழமான பக்தியை வெளிப்படுத்தி நிற்பவை.
- இறைவனது தோற்றப் பொலிவை (அகருத் தோற்றப் பொலிவு) விபரித்துப் பாடும் பண்புடையன.
- இறைவனது அருட் செயல்களைப் பாடுதல், இதற்கென வடமொழிப் புராண இதிகாசக் கதைகளைப் பயன்படுத்துதல்.
- விருத்தம், வெண்பா, கட்டளைக் கலித்துறை போன்ற பாவகைள் கையாளப்பட்டிருத்தல். விருத்தப்பா முதலாம் பக்தி இலக்கியங்களில் அறிமுகப்படுத்தல்.
- பதிகம், அந்தாதி, இரட்டை மணிமாலை ஆகிய இலக்கிய வடிவங்கள் கையாளப்படுத்தல்.
- பதிக வடிவத்தினை காரைக் காலம்மையார் முதலில் கையாளுதல்.
- வட மொழிச் செல்வாக்கு.

ஆ)
- காரைக்காலம்மையாராலும் முதலாழ்வர்களாலும் அறிமுகப்படுத்தப்பட்ட சைவ, வைணவ பக்தி இலக்கிய மரபு பல்லவர் காலத்திலும் ஏனைய நாயன்மார்களாலும் ஆழ்வார்களும் முன்னெடுத்துச் செல்லப்பட்டமை. ஏராளமான பக்தி இலக்கியங்கள் தோன்றியமை.
- அகவுருத் தோற்றப் பொலிவினைப் பாடும் மரபு செல்வாக்குச் செலுத்தியமை.
- இறைவனது அருட்செயல்களைப் பாடும் மரபு பின்பற்றப்பட்டமை.
- காரைக்காலம்மையாரால் அறிமுகப்படுத்தப்பட்ட பதிக வடிவம் பல்லவர் காலத்தில் பெருவழக்காகியமை.
- அற்புதத் திருவந்தாதி, 1ம் 2ம் 3ம் திருவந்தாதிகள் பல்லவர் காலத்தில் பொன்வண்ணத்தந்தாதி, பெரிய திருவந்தாதி போன்ற இலக்கியங்களுக்கு வழிகாட்டியமை.
- இரட்டை மணிமாலை தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருமாலை எனும் இலக்கியம் பாட உதவியமை.
- விருத்தப்பா யாப்பின் செல்வாக்கு.

இ) சோழர் காலம்.

- கம்பராமாயணம், கந்த புராணம், பெரிய புராணம் போன்ற சமயச் சார்புடைய காவியங்கள் தோன்றியமை.
- பல்லவர் கால இலக்கியங்கள் திருமுறைகளாகவும், நாலாயிரத் திவ்விய பிரபந்தமாகவும் தொகுக்கப்பட்டமை.
- சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களின் தோற்றம்.
- திருப்பல்லாண்டு, திருவிசைப்பா, சரஸ்வதி அந்தாதி, பட்டினத்துப் பிள்ளையார் பாடல் போன்ற பக்தி இலக்கியங்கள்.

agaram.lk

விஜயநகர நாயக்கர் காலம்

- தல புராணங்கள், சமயச் சிற்றிலக்கியங்களின் தோற்றம்.
  திருப்பரங்கிரிப் புராணம், காஞ்சிப் புராணம், திருவிளையாடல் புராணம், காசிஉலா, திருவாரூர் உலா
- சிவன், திருமாலை விட அம்மன், முருகன் போன்ற தெய்வங்கள் மீது இலக்கியங்கள் தோன்றியமை.
  எடுத்துக்காட்டு - அபிராமி அந்தாதி, சகலகலா வல்லிமாலை, மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ், திருப்புகழ், முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி.
- சித்தர் பாடல்.
- சமய அடிவர்களைப் புகழ்ந்து பாடும் மரபு
  நால்வர் நான்மணி மாலை, சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
- நிந்தாஸ்துதிப் பாடல்கள்

பிற்காலம்.

- இந்து சமய இலக்கியத்துடன் இஸ்லாமிய, கிறிஸ்தவ சமய இலக்கியங்களின் தோற்றம்.
  சீறாப்புராணம் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரியம்.

(6 + 4 + 5 = *15* புள்ளிகள்)

05. *அ)* பரணி - மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி, அஞ்ஞைவதைப் பரணி.
உலா - திருவாரூருலா, திருக்களாத்தி நாதருலா, ஏகாம்பரநாதருலா, மதுரைச் சொக்கநாதருலா, திருவானைக்காவுலா
தூது - சிவஞானபாலைய சுவாமிகள், நெஞ்சவிடுதூது.
கலம்பகம் - மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், புள்ளிருக்கு வேருர்க் கலம்பகம்.
பிள்ளைத் தமிழ் - மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
நான்மணி மாலை – நால்வர் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணிமலை
மும்மணிக் கோவை – பண்டார மும்மணிக்கோவை, சிதம்பர மும்மணிக் கோவை, நம்பெருமாள் மும்மணிக் கோவை

ஆ) பரணி - கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி.

- கலிங்கத்துப் பரணி
  - சயங்கொண்டார் பாடியது.
  - தமிழில் தோன்றிய முதற்பரணி எனப்படுகின்றது.
  - ஏனைய பரணி இலக்கியங்களுக்கு வழிகாட்டி.
  - முதலாம் குலோத்துங்கன் கலிங்கத்தின் மீது போர் தொடுத்து வென்றமையைப் பாடுகின்றது.

- தக்கயாகப் பரணி
  - ஒட்டக் கூத்தர் பாடியது.
  - தக்கனது யாகத்தை சிவனின் அம்சமாக உள்ள வீரபத்திரர் அழித்தமையைக் கூறுகின்றது.
  - எனினும் சோழமன்னனின் பெருமைகள் நூலின் உள்ளே பாடப்பட்டுள்ளன.
  - உலா, மூவருலா
  - ஒட்டக் கூத்தரால் பாடப்பட்டது.
  - விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா.
  - என மூன்று தலைமுறை மன்னர்கள் மீது பாடப்பட்டது.
  - சோழமன்னர்கள் போர், வீரம், தன்னிகரில்லாத் தன்மை, வரலாறு என்பன எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

- பிள்ளைத்தமிழ்
  - குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்
  - ஒட்டக் கூத்தரினால் பாடப்பட்டது.
  - இரண்டாம் குலோத்துங்க சோழன் மீது பாடப்பட்டுள்ளது.
  - மன்னனது குழந்தைப் பருவம் செயற்பாடுகள் பாடப்பட்டுள்ளன.
  - காலத்தால் முந்திய பிள்ளைத் தமிழர்கள் கருதப்படுகின்றது.

agaram.lk

இ) பரணி - மோகவதைப்பரணி, பாவசவதைப் பரணி, அஞ்ஞைவதைப் பரணி, மன்னர்களின் போர்வீர ஆற்றலை வெளிப்படுத்திய மரபு மாறி சமய தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்தல் பாடப்பட்டுள்ளது.

உலா - திருக்காளத்தி நாதருலா, ஏகாம்பர நாதருலா, மதுரைச் சொக்கநாதருலா ....

- சோழர் காலத்தில் மன்னர்கள் மீது உலாப்பாடிய மரபு இக்காலப்பகுதியில் இறைவன் மீது பாடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தலங்கள் மீது எழுந்தருளிய இறைவனது சிறப்புக் கூறப்பட்டுள்ளன.

பிள்ளைத் தமிழ் - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்

- மன்னர்கள் மீது பிள்ளைத் தமிழ் பாடிய மரபு மாற்றம் அடைந்து கடவுளர் மீது பாடப்பட்டுள்ளது.
- சிவன், விஷ்ணு போன்ற பெரும் தெய்வங்களை விடுத்து அம்மன் மீதும், முருகன் மீதும் பாடப்பட்டுள்ளது.

(5 + 5 + 5 = 15 புள்ளிகள்)

06. அ) தூது இலக்கியங்கள்

கண்ணியவளை குருநாத சுவாமி கிள்ளைவிடுதூது

- வரத பண்டிதரால் பாடப்பட்டது.
- கண்ணியவளை எனும் இடத்தில் குடிகொண்டிருக்கும் குருநாதசுவாமி மீது காதல் கொள்ளும் பெண்ணொருத்தி கிளியைத் தூது அனுப்புவதாகப் பாடப்பட்டுள்ளது.

பஞ்சவன்னத்தூது

- இணுவில் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்டது.
- உலாச்சென்ற கைலாசநாதன் (இள்நதாரி) மீது காதல் கொண்ட சந்திரமோகினி எனும் பெண், ஐந்து வகையான பொருட்களை தூது அனுப்பி தனது காதலை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. தலைவியின் பெயர் சுட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆ) அந்தாதி இலக்கியங்கள்

மறைசையந்தாதி, கல்வளையந்தாதி

- இரண்டும் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்டவை.
- புலியூரந்தாதி – மாதகல் மயில்வாகப் புலவரால் பாடப்பட்டது.

இ) புராணம்

- கனகிபுராணம் - வண்ணார் பண்ணைச் சிவன் கோயிற் சூழலில் வாழ்ந்த கனகி எனும் தேவதாசியை மையமாகக் கொண்டு நட்டுவச் சுப்பையனாரால் பாடப்பட்டது.
  அக்காலப் பரத்தமை ஒழுக்கத்தையும் பிரமுகர்களின் நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்துகின்றது.
- கோட்டுப் புராணம் - உடுப்பிட்டி, வே. இராமலிங்கம் என்பவரால் பாடப்பட்டது.
  கோடேறி வழக்காடியதால் ஏற்பட்ட சீரழிவுகளை அங்கதச் சுவையுடன் பாடுகின்றது.
- தால புராணம் - பனையின் பயன்பாடு பற்றிக் கூறுகின்றது.
  - பனங்காய்ப்பாரதம் எனவும் அழைக்கப்படுகின்றது.
  - அச்சுவேலி நீ.காசிநாதப்புலவர் இயற்றியுள்ளார்.
- சாதி நிர்ணய புராணம்
  - யாழ்ப்பாண சமூக அமைப்பில் சாதியப் பெயரால் நிகழ்ந்த சீர்கேடுகளை எழுத்துரைக்கின்றது.

தூது

- தத்தைவிடுதூது
  பெண்கள் தொடர்பான முற்போக்கு சிந்தனைகளையும், பெண் விழிப்புணர்வையும் எடுத்துக் கூறுகின்றது. தி.த.சரணவமுத்துப் பிள்ளை இயற்றியுள்ளார்.

(4 + 4 + 7 = 15 புள்ளிகள்)

07. அ) நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

- பக்திப் பாடல்கள் பலவற்றை இயற்றியமை.
  இவற்றினூடாக சமய தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்தியமை.
  நாமகள் புகழ்மாலை, விநாயகர் பாமாலை, கதிரைமலைச் சிலேடை வெண்பா, நல்லைத் திருப்புகழ்
  நல்லை நான்மணிமாலை அந்தாதி, சைவசித்தாந்தக் கட்டளைக் கும்மி
- சமுதாய, தேசிய உணர்வுள்ள பாடல்களை இயற்றியமை.

agaram.lk

இலங்கை வளம், மரதனம் அஞ்சல் ஓட்டம், தால விலாசம்.

- தனிச் செய்யுள்களும் இயற்றியுள்ளார்.
  செந்தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள், தொல்புரம் பனைத் தெழில் விருத்தி, ஐக்கிய சங்க வேலைகள்.
- சிறுவர்க்குரிய பல பாடல்களை இயற்றியமை.
  இவை எளிமையும் சந்தமும் மிகுந்தவை கத்தரித்தோட்டத்து வெருளி, பவளக்கொடி, எலியும் சேவலும்,தாடி அறுந்த வேடன், உயிரிளங்குமரன் நாடகம்.

ஆ) சி. வை. தாமோதரம்பிள்ளை

- இலங்கையின் தனித்தன்மையான மரபுவழிக் கல்வியும் மேலைநாட்டு நவீன கல்வி முறையும் ஒருங்கே கற்றவர்.
- பதியுந்துறையாசிரியர், நூலாசிரியர், பத்திராதிபர், உரைநடை வல்லாளர், இலக்கிய வரலாற்று ஆசிரியர், கல்வியியலாளர் எனப் பன்முகப்பட்ட பணிகள்.
- பதிப்புத் துறையின் முன்னோடி
  தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி, வீரசோழியம், இறையனார் களவியலுரை என்பன பதிப்பித்தவர்.
- பதிப்பு நூல்களில் எழுதிய பதிப்பரை "தாமோதரம்" எனும் பெயரில் தொடுக்கப்பட்டது.
- நூலாசிரியர் பணி.
  நட்சத்திரமாலை, சைவமகத்துவம், ஆறாம் ஏழாம் வாசகப் புத்தகம்.
- செய்யுட் பணி.
  சாற்றுகவி, சமரகவி பாடுவதில் வல்லவர்.

இ) பேராசிரியர் ம. மு. உவைஸ்

- இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர், மதுரைக் காமராஜர் பல்கலைக்கழக இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துறைப் பேராசிரியர்.
- இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கற்கைத் துறையினை அறிமுகப்படுத்தியவர்.
- இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தொடர்பான இவரது முதுமாணி, கலாநிதிப் பட்ட ஆய்வுகள்.
- இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் தேடல்களும் பதிப்புகளும்.
- மொழிபெயர்ப்பு – கம்பெரலிய (கிராமப் பிறழ்வு)
- இலக்கியத் தமிழ் இலக்கிய மாநாடுகள்.

ஈ) டானியல்

- ஈழத்து புனைகதை வளர்ச்சியில் டானியலுக்கு முக்கிய பங்குண்டு.
- 1960 – 1980 களில் பல நூல்களை எழுதினார்.
- முற்போக்கு இலக்கிய முன்னோடிகளில் ஒருவர்.
- பஞ்சமர், காலை, தண்ணீர், கோவிந்தன், அடிமைகள் என்பன இவரது நாவல்கள்.
- சிறுகதைகள் பல எழுதியுள்ளமை அவை தொகுப்புகளாக வெளிவந்துள்ளன.
- சாதிய எடுக்குமுறை, தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை இவரது நூல்களின் முக்கிய தொனிப்பொருளாக அமைந்தன.
- தலித் இலக்கியத்தின் முன்னோடியாகக் கருதப்பட்டார்.
- தனது நூல்களில் சமூகப் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தியவர்களில் இவரும் ஒருவர். (15 புள்ளிகள்)

08. அ) (i) மோசமான என்பது எரிபொருளா அல்லது பற்றாக்குறையா என்பதில் மயக்கம் உண்டு.

(ii) ஒவ்வொரு எனும் சொல்லை அடுத்து மனிதர்களும் எனும் பன்மை வராது.
ஒவ்வொரு மனிதனும் சமூக நலனில் அக்கறை கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) வானத்தில் பருந்துகள் வட்டமிட்டுப் பறந்தன ஆனால் அவை தமக்கான இரையைக் கண்டு கொள்ளவில்லை.

(iv)
- பிள்ளைகள் பாடங்களை கற்றுத் தெளிந்து கொள்ள ஆசிரிய வழிகாட்ட வேண்டும்.
- பிள்ளைகள் வாழ்க்கை முறையில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.
- பிள்ளைகள் அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

agaram.lk

(v) பார் - முதல்வினை – கண்ணன் மலையைப் பார்த்ததான்.
துணைவினை – நான் அவனிடம் சொல்லிப் பார்த்தேன்

வை – முதல்வினை – அவள் மேசை மீது உணவுத் தட்டை வைத்தாள்
துணைவினை – நான் நேற்றுத்தான் அவனிடம் கூறிவைத்தேன்

(5 x 2 = 10 புள்ளிகள்)

ஆ) (i) அளபெடை

- எழுத்துக்கள் தாம் ஒலிக்கும் கால அளவினை விட்டு நீண்டொலித்தல்.
- செய்யுள்களில் ஓசை குறையுமிடத்தோ, உணர்வுகளைத் தாக்கமாக வெளியிடவோ நீண்டொலித்தல்.
- இருவகைப்படும்
  1. உயிரள பெடை
  2. ஒற்றள பெடை
- உயிரளபெடை – உயிர் நெடில் எழுத்துக்கள் தமது 2 மாத்திரை விட்டு நீண்டொலித்தல். சொற்களில் முதல், இடை, கடை ஆகிய இடங்களில் நீண்டொலித்தல்.
  நீண்டொலித்தலுக்கு அடையாளமாக நெடில் எழுத்தின் இனமான குறில் எழுத்தை இடல்.
  உ – ம் ஓஒதல் (மொழிமுதல்)
  தொழாஅள் (மொழி இடை)
  படாஅ (மொழிக் கடை)
- ஒற்றளபெடை – மெய்யெழுத்துக்கள் தமக்குரிய ½ மாத்திரையில் இருந்து நீண்டடொலித்தலுக்கு அடையாளமாக அதே எழுத்து அருகில˙ இடல்.
  எழுத்து அருகில் இடல்.
  மொழிக்கு இடை, கடை ஆகிய இடங்களில் அளபெடுக்கும்.

(ii) விளிவேற்றுமை

- தமிழ் இலக்கண நூல்கள் எட்டாம் வேற்றுமையாகக் குறிப்பிடும்.
- பேசுவோன் படர்க்கை இடத்திற்குரியரை முன்னிலைப்படுத்தி அழைத்தல் விளிவேற்றுமை ஆகும்.
- உருபுகள் இல்லை.
- விளிக்கப்படும் பெயர்ச்சொற்கள் திரிபடைகின்றன.
  - ஏகார ஈறு பெறுதல்
    தாய் + ஏ ⟶ தாயே
  - ஈற்று இகரம் ஈகாரம் ஆகுதல்
    தம்பி ⟶ தம்பீ
  - ஈற்று அயல திரிதல்
    புலவர்கள் ⟶ புலவர்கள்
  - ஐஈறு ஆய் விகுதி பெற
    நாரை ⟶ நாராய்

(iii) பொது வினை

சில வினைகள் செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் செயப்படுபொருள் குன்றாத வினையாகவும் பொதுவாக வரும் பொழுது அவை பொதுவினை எனப்படும்.

எடுத்துக் காட்டு

நனை

அவன் ஆடையை நனைத்தான் (செயப்படுபொருள் குன்றாவினை) விளக்கம்

அவன் மழையில் நனைந்தான் (செயப்படு பொருள் குன்றிய வினை) விளக்கம்

agaram.lk